# விளம்பரம்™

**VLAMBARAM™**

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 20 OCTOBER 15, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன்

RE/MAX Crossroads Rlty Inc. sales rep.

* இன்றைய சேவை- நாளைய வெற்றி



❄ ஆரோக்கிய வாழ்வில் சூரியஒளியின் பங்கு (பக். 4)

❄ தோலில்லா மனிதர்களிற்கு பேதம் கிடையாது (பக்.5)

❄ எலும்புகளிற்குள் தண்ணீர் இருக்குமா?(பக். 9)

❄ 67ல் சிறந்த நடிகர் AVM ராஜன் (பக்.7)

❄ எமது கிறடிட் தராதரத்தை உயர்த்துவதற்கான வழிகள் (பக். 3)

❄ கனடாவில் குடும்ப வீட்டுப் பிரதிநிதி தேவையா? (பக்.13)

❄ பிள்ளைகள் கெட்டால், தாயா தந்தையா பொறுப்பு (பக்.10)

❄ அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு -கனேடிய தமிழர் அணி (பக்.6)



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

**சபோனாவிற்கு!**

*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

Markham / Eglinton

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

☞ நாம் எல்லோரும் தெய்வத்தின் குழந்தைகள் என்றால் காரணத்தை முன்னிட்டே ஒருவரோடு ஒருவர் சகோதர பாவனை கொள்ள வேண்டும்.

☞ உலகப்பற்று ஒளியுமளவு தெய்வப்பற்று அதிகரிக்கிறது.

☞ கடவுளை உன் தந்தையென்று தொழுது விட்டு, உன் அயலானைச் சகோதரன் என்று பாராட்டாது மறுத்துவிட்டால் நீ உண்மையாகத் தெய்வத்தைத் தொழுதவன் அல்லன்.

☞ நாம் ஆத்ம சொரூபம் என்றால் அனுபூதியில் அதை உணர வேண்டும், வெறுமனே அதைப்பற்றி நம்பினால் போதாது.

☞ தன்னைத்தானே தூயவனாக்கிக் கொள்ள வேண்டும். ஒருவன் மற்றொருவனைத் தூயவனாக்கிவிட முடியாது.

## உலகக் கோலங்கள்

- சிவ பஞ்சலிங்கம்

**பனாமா (Panama)**

மத்திய அமெரிக்காவில் தெற்கு எல்லையாக உள்ள நாடு "பனாமா" ஆகும். "கோஸ்ராறிக்கா" "கொலம்பியா" "கரிபியன் கடல்" பசுபிக் சமுத்திரம் ஆகியன இதன் எல்லைகளாகும்.

**பரப்பளவு:** 30193 ச..மை

**மக்கள் குடித்தொகை:** 2,431,000 பேர்

**தலைநகரம்:** "பனாமா" நகரம் (பனாமா வளைகுடா கடற்கரையுடன் உள்ளது)

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர் - 93% கிறிஸ்தவர் - 6%.

**மொழி:** ஸ்பானிஷ், ஆங்கிலம்

மிகவும் வெப்பமான நாடு. அதிகமான மழை காலமும் ஏற்படும். மலைகள், குன்றுகள் உள்ள தரை இடங்கள் ஆகும். கிழக்கு, வடமேற்கு பகுதிகள் அடர்த்தியான காடுகள் உள்ள இடமாகும்.

**சுதந்திரம் :** நவம்பர் 28/1821இல் ஸ்பெயின் நாட்டிடன் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது. பினனர் கொலம்பியாவின் ஆதிக்கத்திற்குள்ளாகி நவம்பர் 03/1903ல்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

மனதில் கொள்ளுங்கள். உண்மை, நேர்மை, ஒழுங்கு, நல்லெண்ணம், உதவி என்பனவே வாழ்வின் அடிப்படைகள். வாழ்வில் நிரந்தர, உண்மையான வெற்றி பெற விரும்புபவர்கள் இதில் நம்பிக்கை கொண்டிருப்பார்கள். இதுதவிர்ந்த பாதைகளிலும் சென்று குறுகிய காலம் வெற்றிபெற்றவர்களையும் காணக்கூடியதாக இருக்கும். ஆனால் இது நிரந்தர வெற்றியா? கேள்விக்குரிய பதில் காணவேண்டியது நீங்களே.

வாழ்வில் சோதனைகளை சாதனையாக்க விரும்புகிறோம். நாம் விரும்பிய நல்லவைகளை எல்லாம் அடைய விரும்புகின்றோம். அப்படி ஒரு வெற்றிக்கு வழி இருக்கிறதா? ஆம் இருக்கிறது. இதனைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு எங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டால் வெற்றிகிடைக்கும், எதனையும் சாதிக்க முடியும். முதலாவது வெற்றிகொள்ளும் உந்துதல் மனதில் இருக்க வேண்டும் என்னத்தை அடையவேண்டும் என்ற தெளிவு. எதனை நோக்கினும் எமது நோக்கத்தை வெற்றி காணும் மனோபாவத்துடன் பார்ப்பதுதான் அடிப்படை என்கிறார் பேராசிரியர் டேவிட் மெக்கினல்லண்ட.

-நெற்றிக்கண்ணன்


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM

**SINGAPORE CELLULAR**



Bell Mobility

CANTEL

FREE PAGER $100. Only

Call for Details

For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

**சிவாகம கிரியா பீடம்**



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr. , Scarborough, Ont.



# அறிவும் ஆக்கமும் (43)

-விஜே குலத்துங்கம்

தாயகத்தில் இருந்தபோது, ஆடம்பரப் பொருளாகவும், வசதியுள்ளவர்கள் மாத்திரம் சொந்தமாக வைத்திருந்த மோட்டார் வண்டி அல்லது கார், இங்கு கனடாவில் ஒரு அத்தியாவசியப் பொருளாக உள்ளது. முதன் முதலாக சக்கரம் பூட்டிய வண்டிகள் போக்குவரத்துக்காக 4000 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் தான் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலாக மோட்டார் ஆல் இயங்கும் வண்டி 1769ம் ஆண்டு பிரெஞ்சு இராணுவ அதிகாரி Nicolas Joseph Cugnot என்பவரால் 3 சில்லுக் கொண்டதாகவும், மணித்தியாலத்திற்கு 3.2 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடியதாகவும் அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் நீராவியால் இயங்கும் மோட்டார் வண்டிகள் உருவாக்கப்பட்டாலும், 1876 ம் ஆண்டு எரிபொருளால் இயங்கும் 4 Stroke இயந்திரங்கள் உருவாக்கப்பட்டன. 1886ம் ஆண்டு முதல் Benz காரும், 1899 ல் இத்தாலி தனது Fiat காரையும், 1891ம் ஆண்டு பிரான்சு தனது Peugeot காரையும், 1893ம் ஆண்டு அமெரிக்கா Ford காரையும் உருவாக்கியது. ஆரம்பத்தில் பெட்ரோல் ஆல் இயங்கும் வண்டிகளும், 1936 ல் டீசலில் இயங்கும் கார்களும் உருவாகின.

1981 ம் ஆண்டு BMW நிறுவனம், தங்கள் கார்களின் இயக்கத்தை கட்டுப்படுத்த மின் கணணியை கார்களில் பொருத்தியது. தற்போதுள்ள மோட்டார் வண்டிகளில் எரிபொருள் காற்றுக் கலவையின் அளவு, Ignition Timing, exhaust இனால் வெளியேறும் வாயுக்களின் அளவு, Anti Lock பிரேக்குகள், மற்றும் Heater, Air Conditioning, Sound System மற்றும் பல Dash Board இலுள்ள அளவு காட்டும் கருவிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன.

எதிர்காலத்தில் கார்கள் எப்படி இருக்கும் என பார்ப்போமானால் நிறை குறைந்த வண்டிகளும், சிறிய Compact கார்களும், அதிக திறனுள்ள Horse Power உள்ள கார்கள் உருவாகும். 1974ம் ஆண்டை விட தற்போது இரண்டு மடங்கு குறைவானதாக இருக்கின்றது. எதிர்காலத்தில் மிகவும் உரமான ஆனால் பாரம் குறைந்த கலப்பு உலோகங்கள் Plastic போன்ற செயற்கைச் சேர்வைப் பொருட்கள் இயந்திர பாகங்களாக உபயோகிக்க முயற்சிகள் நடக்கின்றன.

1990 களில் ஏற்பட்ட ஒரு முறைதான், செய்மதிகளின் உதவியால் மோட்டார் வண்டி நிற்கும் இடத்தைக் காணும் முறையாகும். இதை Satellite -Aided Global Positioning System எனக் கூறுவார்கள். செய்மதிகளின் உதவியால், மோட்டார் வண்டியிலுள்ள ஒரு மின்கணணியானது ஒரு மொனிட்டரில் உள்ள வரைபடத்தில் கார் எங்கே நிற்கின்றது எனக் காட்டும். எங்கு செல்ல வேண்டும் எனக் கூறினால் மின்கணணி எப்படி செல்ல வேண்டும் என்பதை வரைபடத்தில் காட்டிக் கொண்டு இருக்கும். அதாவது அடுத்த சந்தியில் இடது புறம் திரும்பவேண்டும் பின்பு வலது புறம் திரும்புக எனக் காட்டிக் கொண்டு இருக்கும். சிலவற்றில் மின்கணணி குரல் மூலம் இதைச் சொல்லும். அத்துடன் கார் விபத்தில் சிக்கினால் மின்கணணியுடன் இணைக்கப்பட்ட Cellular Phone மூலம் 911 க்கு விபத்து நடந்த இடத்தை சரியாக அறிவிக்கும். அதிகமான விபத்துக்களில், உதவி வரும் நேரம் பிந்துவதால் தான் உயிரிழப்பு நேரிடுகின்றது. சிலவேளைகளில், தனி இடங்களில் வீதியை விட்டு வாகனம் தூர வீசப்பட்டு, யாரும் காணாதவாறு, விபத்தில் அகப்பட்டவரும் எழுந்து நடமுடியாத நிலையில் உதவிக்கு அழைக்க இயலாமல் இருக்கும். ஆனால் இந்த Global Position முறையால் இந்த ஆபத்து நீங்கிவிடும்.



தற்போது மதுபோதையுடன் வாகனம் செலுத்துவோரை தடுக்கவும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. உள்ளே உள்ள Sensor-உணர்த்தி ஒன்றிற்கு அல்கஹோல் வாடை பட்டால் அந்த Sensor காரை Start பண்ணுவதற்கு இயலாமல் செய்து விடும். மேலும் வண்டிகளின் முன்பக்கத்தில் பொருத்தப்பட்ட Sensor மூலம், முன்னால் செல்லும் வாகனத்திற்கு மிக அண்மையில் சென்றுவிட்டால், தன்னிச்சையாக பிரேக்குகள் அழுத்தப்பட்டு காரின் வேகம் குறைக்கப்படும். நித்திரைத் தூக்கத்தில் வாகனம் செலுத்துவோருக்கு இது உதவியாக இருக்கும். சில வாகனங்களில் பின்புறம் Sensor பொருத்தப்பட்டு, நாங்கள் வாகனத்தை பின்புறமாக நகர்த்தும் போது பின்னால் உள்ளவற்றுடன் மோதாது முன்கூட்டியே முன்னறிவித்தல் கொடுத்து மோதாமல் தடுக்கும். இதனுடன் Blind Spot ல் வாகனம் வந்தால், அதை சாரதிக்கு அறிவுறுத்தும் உணர்த்திகளும் நடைமுறையில் உள்ளது.

இதைவிட கார்கள் திருட்டுப் போகாமலும் பல வசதிகள் உண்டு. ஏற்கனவே பாவனையிலுள்ள Alarm, Steering Club ஆகியவற்றைவிட, குரலை அடையாளம் காணும் கருவி மூலம் குறிப்பிட்ட சாரதி தனது குரலில் சில Code வார்த்தைகளை கூறினால் அன்றி, காரை Start செய்ய இயலாது. முன்கூறிய Global Positioning System மூலமும், கார் திருடப்பட்டால் கார் எங்கே உள்ளது எனவும் பொலிசாருக்கு அறிவித்துவிடும்.

மற்றும் தற்போது பரிசீலிக்கப்பட்டு வரும் இன்னும் ஒரு முறை என்னவெனில், சாரதி Steering ஐ திருப்பாமலும், பிரேக்கை அமத்தாமலும், தன்னிச்சையாக காரை செலுத்தவும் முயற்சிகள் நடக்கின்றன. காரின் மேலே பொருத்தப்பட்ட ஒரு வீடியோ கமெரா மூலம், வீதியின் lane ன் இருபக்கமும் உள்ள வெள்ளைக்கோடுகளை அடையாளமாக வைத்து, அதற்கு சரியாக இடையே தன்னிச்சையாக Steering ஐ திருப்பும் முன் கூறியவாறு Sensor உணர்த்திகளை உபயோகித்து முன்னால் செல்லும் வாகனத்தின் வேகத்தை உணர்ந்து அதற்கு ஏற்ப வேகத்தைக் குறைத்தும், பிரேக்கை அழுத்தியும் வாகனம் செலுத்தப்படும். இப்படியான தன்னிச்சைக் கார்கள் Toyota நிறுவனத்தால் பரீட்சிக்கப்படுகின்றது. ஆனால் மழை, Snow போன்ற நாட்களில் Lane ன் வெள்ளைக் கோடுகளை தீர்மானிப்பதில் சிரமம் உள்ளது. இன்னும் 25 ஆண்டுகள் சென்றால் பறக்கும் கார்கள் பாவனைக்கு வரலாம்.

**************************

**விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு புதன் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கேட்டு மகிழலாம்.**

**********************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.


10 வருடங்களாக தமிழர் மத்தியில்

யோகாஸ்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 100

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 2 |
| | ■ | ■ | ■ | | 3 | ■ | |
| 4 | | | | 5 | | ■ | |
| | ■ | ■ | ■ | ■ | | ■ | |
| | | 6 | ■ | 7 | ■ | | 8 |
| ■ | ■ | 9 | | | 10 | 11 | |
| | ■ | ■ | ■ | | 12 | ■ | ■ |
| 13 | | | | ■ | | | 14 |

**இடமிருந்து - வலம்**

1. கண்ணுக்கு இடும் மை
2. சட்டம் (வல - இட)
3. நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த நிலம் (வல - இட)
4. உறவினர்
6. தலை (வல - இட)
8. ஒத்துக்கொள்ளல் (வல - இட)
9. தர்க்கம்
12. மனைவி (வல - இட)
13. விவசாயம்
14. தாய் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. கிளி
2. வேறுபாடு
3. முடிவு
5. பாய்தலின் பெயர எச்சம்
7. இலக்கணத்தில் ஒரு சொல்லின் இறுதிப்பகுதி
9. படி (கீழ் - மேல்)
10. மணம் (கீழ்-மேல்)
11. நிற்பாட்டு (கீழ் - மேல்)
13. மூங்கில் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் OCTOBER 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பா | ர் | ப் | ப | ன | ன் | ■ | அ |
| த | ■ | ■ | ழ | ■ | ■ | ■ | ந் |
| ர | ■ | சு | மை | ■ | சு | ரி | த |
| ட் | ■ | வை | ■ | ம் | ■ | ■ | ப் |
| சை | ஓ | ■ | ம் | ன | த | ரா | பு |
| ■ | ■ | ம் | ச | வ | க | ■ | ர |
| ண் | ■ | ■ | ர | ■ | வ | ல | ம் |
| க | ட் | டை | வி | ர | ல் | ■ | ■ |

**#99இல் வெற்றி பெற்றோர்**

1) S. Rajaratnam, Etobicoke, Ont.
2. S. Vayantharasapillai, Scarborough, Ont.


*இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்*

DMR

துரித பணமாற்று சேவை

இலங்கை · இந்தியா · சிங்கப்பூர் · ஐரோப்பிய நாடுகள்

ஆகியவற்றிற்கும் பணம் அனுப்ப அல்லது அங்கிருந்து எடுத்து வர உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: (416) 264-8019

262 Markham Road , Scarborough, Ont.

( மேல் மாடி / 2nd floor)

ELECTRICAL REPAIRS


உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன், ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing

ONTARIO'S DRIVE CLEAN




Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )

☎ [416] 285-4998



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING





>Railing > Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



## AJI AUTO WORKS



❋ Mechanical ❋ Auto Electrical Repairs
❋Specialized Brakes ❋Major & Minor Repairs on Import and Domestic Cars
❋ saftly Inspection Certification
VEHICLE EMISSIONS INSPECTION

ONTARIO'S DRIVE CLEAN

T. Sabanathan
T. Sivapatham

Tel: 752-2642
151 Nantucket Blvd, Unit 5,
Scarborough. Ont. M1P 4R5



*We are entering 5 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

NTE AUTO INC.
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN





## அறிந்திருப்பது நல்லது

### உங்கள் Credit Rating உயர்த்துவதற்கான 10 வழிகள்.



**1. Grow Roots** - நிரந்தரமான தொழில் வருமானமும் நிரந்தரமான இருப்பிடமும் முதலில் இருத்தல் வேண்டும் . அதாவது நிரந்தரமான இருப்பிடமென்றால் குறைந்தளவு 1 வருடமாவது நீங்கள் ஒரு இடத்தில் வசித்திருக்க வேண்டும். கடன் தரும் நிறுவனங்கள், உங்களால் உங்கள் நாளாந்த செலவுகளை (Pay Your Bills) பராமரிக்க முடிகிறதா என்பதை பார்க்கிறார்கள்.

**2. Pay Your Bills on Time**

உங்கள் Credit Card, தொலைபேசி, Gas, Electricity ஆகிய எல்லா வகையான Bill களை அதன் குறித்த நேரகாலத்திற்குள் கட்டியிருக்க வேண்டும். Credit Card ற்கு குறைந்தது Billல் இருக்கும் குறைந்த கட்டணத்தை (Minimum Payment) யாவது கட்டியிருக்க வேண்டும். ஒரு தடவை அல்லது இருதடவை பிந்தியிருந்தால் பரவாயில்லை ஆனால் பலமுறை பிந்தியிருந்தால் விளக்கம் கொடுக்க வேண்டிய நிலை வரும்.

**3. Run a Credit Check on yourself**

உங்களுடைய Credit Rating நீங்களே அறியலாம். அதாவது Credit Bureau Equifax #1-800-465-7166 என்ற நம்பருக்கு அழைத்து உங்களுடைய இனாமான Credit Report ஐ பெற்று கொள்ளலாம். உண்மை என்னவெனில் 4 Report ல் 1 Report [One out of four] பிழையான தகவல்கள் இருக்கின்றன. அப்படி இருப்பின் நீங்கள் அந்த Credit Bureau ற்கோ அல்லது உங்கள் பிழையான தகவல் இருக்கும் நிறுவனத்திற்கோ தொலைபேசி மூலம் கதைத்து உங்கள் Report ஐ சரிப்படுத்தலாம்.

**உதாரணமாக** - உங்களிடம் Sears Card இல்லை. ஆனால் உங்கள் Reportல் நீங்கள் Sears Card ற்கு செலுத்திய பணம் நேரம் பிந்தியிருப்பதாக இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டியது உடனடியாக Credit Bureau ற்கு தொலைபேசி மூலம் கதைத்து பிழையை நிவர்த்தி செய்தல் வேண்டும். அது தவறின் நீங்கள் Sears Co. ற்கும் தொலைபேசி மூலம் கதைத்து நிவர்த்தி செய்யலாம்.

**4. Start Small** அதாவது உங்களுக்கு Credit History இல்லாவிடின் நீங்கள் $50,000. Line of Credit ஐ கேட்டு வங்கியை அணுகுவது சிறந்ததல்ல. அது உங்கட்கு கிடைக்கவும் மாட்டாது. செய்ய வேண்டியது என்னவெனில்
ஒரு சிறிய R.R.S.P. Loan ஐ எடுத்து அந்த தவணைக்குள் நேரம் தவறாமல் கட்டி முடிக்கவும் அல்லது ஒரு Department Store Card ஐ Apply பண்ணி எடுத்து அதை நேரம் தவறாமல் கட்டி முடித்திருத்தல் வேண்டும். இது உங்கட்கு ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும்.

**5. Secure yourself**

அதாவது உங்களால் Credit Card எடுக்க முடியாவிடில் நீங்கள் கட்டு பணமாக சிறு தொகையை கட்டி Credit Card ஐ எடுக்கலாம். (Secured Credit Card) அதன் பின் நீங்கள் இந்த Card ஐ வைத்து உங்கள் Credit ஐ தொடரலாம்.

மிகுதி அடுத்த இதழில் மேலதிக விபரங்களுக்கு- ***சோதீஸ்*** *Cell* (416) 704 -1179



# ஆரோக்கிய வாழ்வு (43)

- *N.* செல்வசோதி

## ஆரோக்கிய வாழ்வுக்கு ஆக்கபூர்வமான யோசனைகள்

### 1. சூரிய ஒளி

மனிதன் ஆரோக்கியமாக வாழ முக்கியமான தேவைகளில் ஒன்று சூரிய ஒளி. சூரிய ஒளி இல்லாவிட்டால் தாவரங்கள் நிறம் மாறி அழிந்துவிடும். மனிதன் உடலில் சூரிய ஒளி படாது விட்டால் முகம் வெளுத்து உடல் ஆரோக்கியம் கெட்டு விடும். தாவரங்கள் சூரிய ஒளியைப் பெறுவதால் இலைகள் பசுமையாக இருக்கின்றன. அதேபோல் மனிதனுக்கும் சூரிய ஒளியால் ஆரோக்கியம விருத்தியாக ரத்தம் மேலும் சிவப்பாக மாறுகிறது. பழங்களும் காய்களும் சூரிய ஒளியைப் பெற்றுத் தம்மிடத்தில் தேக்கி வைத்துக் கொள்கின்றன. பழங்களை அப்படியே சாப்பிடுவதால் சூரிய ஒளியின் சத்து நமக்குக் கிடைக்கின்றன. காய்களை அதிகம் வேக வைக்காது சாப்பிட்டால்தான் சத்துப் பொருள் முழுவதும் கிடைக்கின்றன. சமைக்காது சாப்பிடக்கூடிய காய்களை அப்படியே சாப்பிட வேண்டும்.

சூரிய ஒளி உடலில் நன்றாகப்படும் வண்ணம் உடைகளை அணிய வேண்டும். பகல் பொழுதில் சிறிது நேரமாவது சூரிய ஒளியில் உலாவுதல் நன்மை பயக்கும்.

**2. காற்று** மனிதனின் ஆரோக்கய வாழ்வுக்கு அடுத்த முக்கிய தேவை காற்று. மனிதன் உணவு இல்லாது பல நாள் உயிர் வாழலாம். தண்ணீர் பருகாமல் சிலநாள் வாழலாம். ஆனால் காற்று இல்லாது ஒரு சில விநாடி கூட உயிர்வாழமுடியாது. நாம் சுவாசிக்கும் தூய காற்றானது நுரையீரலிலுள்ள கரியமில வாயுவை அகற்றி அதனை சுத்தமாக்குகின்றது. வசிக்கும் வீட்டு அறைகளுள் ஜன்னல்கள் கதவுகள் என்பனவற்றை இடையிடையே திறந்து வைப்பதன் மூலம் சுத்தமான காற்று உடல் முழுவதும் படுகிறது. நுரையீரலைப்போல் உடலிலுள்ள மயிர்கண்களுக்கும் சுத்தமான காற்று தேவையாகும். இலேசானதும் இறுக்கமற்றதுமான ஆடை அணிவது சருமம் முழுவதற்கும் காற்றுப்பட உதவுகிறது.

சாப்பாட்டிற்கு முன் தினமும் ஆழ்ந்த மூச்சை உள்ளுக்கு இழுத்து மெல்ல வெளிவிட வேண்டும். அதேபோல் படுத்துத் தூங்குவதற்கு முன்னதாகவும் சுமார் பத்துமுறை சுவாசத்தை நன்றாக உள்ளிழுத்து வெளிவிடும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**தண்ணீர்**

அதிகம் பணச் செலவில்லாததும் எதையும் சுத்தம் செய்வதும் தண்ணீர் ஒன்றுதான். மனிதனின் ஆரோக்கியத்திற்குத் தண்ணீர் அவசியமாது. சுத்தமான தண்ணீரை அதிகாலையிலும், படுப்பதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவும், உணவு உண்பதற்கு முன்பும், இரண்டு மணி நேரம் பிந்தியும் பருக வேண்டும்.

குளிர்ந்த தண்ணீரில் குளிப்பதுதான் ஆரோக்கியமானது. ரத்த பாச்சல் நன்றாக இருக்கும். புத்துணர்வும் தெம்பும் உடலில் ஏறபடும். வெந்நீரல குளப்பதால ரத்த பாச்சல் தாமதமாவதுடன் குளித்தவுடன் உடலிலிருந்து வியர்வை வெளியாகின்றது.

**உணவு**

ஆரோக்கிய வாழ்வுக்கு சத்தான தூய்மையான உணவு தேவை. அதிக உணவு உண்பதைவிட சத்தான உணவை ஓரளவு உண்டு வந்தாலே போதுமானது. உணவில் பெரும்பகுதி காய்கள், பழங்கள் முதலியனவாக இருக்க வேண்டும். காய்களை அதிகம் வேக வைக்கக் கூடாது. தானியங்கள் முளைகட்டியதாக இருக்க வேண்டும்.

**சீரான வாழ்க்கை முறை**

ஒருவருடைய வாழ்க்கை முறைதான் அவருடைய ஆரோக்கியத்திற்கு உறுதுணையாக அமைகின்றது. மது, மயக்க மருந்துகள், சிகரெட் வகைகள், காப்பி, டீ ஆகிய பழக்கங்களுக்கு அடிமையாகக் கூடாது. தூய வாழ்க்கையாக இருக்க வேண்டும்.

**உடற்பயிற்சி**

திறந்த வெளியிலோ, காற்றோட்டமுள்ள அறையிலோ தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டும். செய்யும் தொழிலே உடற்பயிற்சி போன்றதாக இருந்தால தனியாகச் செய்ய வேண்டியதில்லை. ஆனால் இலேசான யோகாசன பயிற்சிகள் செய்துவருதல் நன்று. இயற்கையோடு நாம் இணைந்திருப்பதற்கு நாளில் ஒரு மணி நேரமாவது காலணி இல்லாது தரையில் கால்கள் படும்படி நடந்து வருவது எல்லாவற்றையும் விட முக்கியமானது. வெப்பம் காற்று, தண்ணீரைப்போல மண்ணும் நமது ஆரோக்கியத்திற்குத் தேவை என்பதை மறந்து விடக்கூடாது.

**மனநிலை**

ஆவேசம், கோபம் போன்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது, பொறாமை வீணான கவலை என்பனவற்றிற்கு அடிமையாகாது அனைவரிடத்திலும் அன்பாகப் பழகவேண்டும். ஆத்திரம்தான் மனிதனது ஆயுளைக் குறைக்கிறது. ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. ரத்தக் கொதிப்பை உண்டு பண்ணுகிறது. துன்பத்திற்கு ஆளாக்குகிறது.

மன அமைதி மிக முக்கியமானது. மன அமைதி இருந்தால் ஆரோக்கியம் விருத்தியாகும். நோய்கள் தோன்ற வாய்ப்பிருக்காது. - நன்றி யோகக்கலை


**யோகாசன வகுப்பு**

கடந்த ஞாயிறு, செப்டம்பர் 19, 99 ந் திகதியிலிருந்து யோகாசன வகுப்பு நடைபெறுகின்றது

இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)

நேரம்: 7:30 am 8:30am தொடர்புகளிற்கு - சத்தி: 291-5853



**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்




கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484






பூட்டு? சாவி?

**KEERTH LOGSMITH**

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்



(416) 439-3709
Pager: 375-7330





**கிராமத்து விருந்து**

RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.

603 Kennedy Road,
Scarborough, Ont.

☎: (416) 266-4240

4வது ஆண்டில் எமது உணவகம்

| | | |
|---|---|---|
| மரக்கறி | சாப்பாடு | $2.99 |
| மீன் | சாப்பாடு | $4.99 |
| கோழி | சாப்பாடு | $3.99 |
| Ontario Crab | பிரஸ் நண்டு | $4.99 |
| யாழ் தோசை 4 | | $1.99 |
| கொத்து ரொட்டி, ஆடு, மாடு, கோழி | | $3.99 |
| மசாலாதோசை | " " " | $2.99 |
| சிங்கப்பூர் நூடில்ஸ் - சிக்கன் | | $3.99 |
| 2 மட்டன் ரோல்ஸ் | | $1.00 |
| 3 வடை | | $1.00 |

OCTOBER 30ந் திகதி வரை மட்டும்

# முத்துக்குறள் மூன்று

ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



உலகில் உள்ள மனிதர் அனைவரும் பிறப்பால் பேதமின்றி இருந்தாலும் மொழியால் நிச்சயம் வேறுபடுகின்றது. பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் என்பவற்றால வேறுபடுகின்றனர். எந்தவொரு நாட்டினருக்கும அவர்களுக்கென்று இவை இல்லாவிட்டால் எந்த நாட்டையும் எவையும் மதிக்க மாட்டார்கள். உலக அரங்கிலும் அது ஒரு தனி இடத்தை வகிக்காது. ஆகவேதான் எந்தவொரு இனத்தவரும் தங்களது மொழி, கலை, கலாச்சார நாகரீக பண்பாட்டைத் தங்களது உயிரினும் மேலாக பாதுகாத்து வருகிறார்கள். இவை யாவும் இன்று நேற்று வந்தவையல்ல. அப்படி ஏற்படக்கூடியவையும அல்ல. இது பாரம்பரியமாக கணக்கிற்கு எட்டாத காலகட்டத்தில் தோன்றியவையாகும். ஆகவேதான் ஒவ்வொரு நாட்டினரும் தமது பரம்பரைச சொத்தாக கருதுகிறார்கள். இது அவர்களுக்கு பெருமையைக் கொடுக்கிறது. இப்படியாக உலகில் உள்ள பல்லாயிரம் மொழிகளுள் நம்தமிழ்மொழி மேற்சொன்ன எல்லாவற்றாலும், மேற்சொன்ன எல்லா சிறப்புக்களாலும மேலோங்கி நின்றதற்கு பல சான்றுகள் உள்ளன. அதிலே நமக்கு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை தெட்டத்தெளிவாக அறிவுறுத்தும் சிறந்த முதன்மையான நூலே திருக்குறள் ஆகும்.

எதுஎப்படியிருப்பினும் பொறுமை என்னும் நகையணிந்து உலகமக்கள் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.

**"பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை**
**மறுத்த லதனினும் நன்று"**

இறப்பைத் தரக்கூடிய கொடிய செயல்களாக இருந்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும். அளவுகடந்து செய்யப்பட்ட தீங்கைப் பொறுத்துக் கொள்வதைக் காட்டிலும், அந்தத் தீங்கை அறவே மறந்து விடுவதே சிறந்த பண்பாகும். இதுவே சிறப்புக்கள் அனைத்தையும் தருவதாகும். தீங்கு செய்தவர்களுக்கு நாமும் தீங்கு செய்து விடுதல் எளிது. இது மனித இயல்பு, இயற்கையும் கூட ஆனால் இது சிறந்த பண்பாகாது. நமக்கு ஒருவர் தீமை செய்து விடும்போது நாம் துன்பப்படுவது இயற்கை தான். இருந்தாலும் தீங்கு செய்தவர்களுக்கு நாம் திரும்பச் செய்து விடுவதால் என்ன பயன். தண்டனை கொடுத்தால் மனதிற்கு கொடுப்பவர்க்கும், கொடுத்தவருக்கும் வருத்தமே. இவை தவிர வேறு என்ன கிடைக்கப் போகிறது.

இதையே வள்ளுவர் **"ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்"**

தமக்குக் கேடு செய்தவரை மன்னித்திடாமல் தண்டிப்பவர்க்கு அந்த ஒருநாள் மட்டுமே இன்பமாக அமையும். மறப்போம், மன்னிப்போம் எனப் பொறுமை கடைப்பிடிப்போருக்கோ வாழ்நாள் முழுவதும் புகழ்மிக்கதாக அமையும். அதாவது நமக்கு தண்டனை அளிப்பவர் அந்த நேரத்தில் மட்டும் இன்பம் அடைகிறார். நாம் அதைப் பொறுத்து விட வேண்டும்.

மேலும சேற்றில் விட்ட ஒரு காலை, நல்ல நிலத்தில் மறுகால் ஊன்றி எடுத்து விடுவதற்கு பதிலாக அந்தக் காலையும் சேற்றில் விடுவது எப்படிப் புத்திசாலித்தனமாகும்? எனவே தீமைசெய்தவர்களுக்கு திருப்பித் தீமை செய்தவர்கள் மேலும் தீமைக்கே உள்ளாவார்கள். அறிவிற் சிறந்தோர் பொறுத்துப் போவோரையே போற்றி சிறப்பித்து பொன்போல் மதிப்பார்கள். எனவே பொறுமையை இயன்றளவு கடைப்பிடியுங்கள்.

செந்தழிழ், பைந்தமிழ், முத்தமிழ், வண்டமிழ், தெந்தமிழ், தேன் தமிழ், கன்னித தமிழ் எனத் தமிழைப் பற்பல வகைகளாலும் உயர்த்திப் பாராட்டிப் பேசுவது நம் மரபு. தமிழ் என்ற சொல்லுக்கே இனிமையென்ற பொருள் கண்டு நம் முன்னோர்கள் பலவாறாகப் பாராட்டியுள்ளதையிட்டு நாம் பெருமை அடைகிறோம். ஆனால் அந்த தமிழை எந்த அளவிற்கு மதித்து நம்முடைய வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் பயன்படுத்தி பயனடைந்து வந்துள்ளோம், பயன்படுத்தி வருகின்றோம் என்று ஆராய்ந்தால் விளைவு வேதனை மிகுந்ததாகவே இருக்கும். புறவாழ்வுத்துறைகள் எவ்வாறு அமைந்தாலும் இறைவனிடம் உள்ளம் கனிந்து அன்பு செலுத்தும் அகவாழ்வுத் துறையிலும் கூட தமிழின் உரிமையை நான் நினைவு நிறுத்தவில்லை.

**"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்"** என்று செப்புகிறார்.

இக்குறள் என்னை பலதடவை சிந்திக்க வைத்ததுண்டு.. என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. வள்ளுவர் மிக தெய்வநம்பிக்கை உள்ளவர். தான எழுதிய 133 அதிகாரங்களுள் முதல் அதிகாரமாக கடவுள் வாழ்த்தைக் கூறி தெய்வத்தின் சிறந்த குணாதிசயங்களை கடவுள் வாழ்த்து என்கின்ற முதல அதிகாரத்தால் சிறப்பித்தவர். கடவுள் சகல வல்லமை உள்ளவர் என்பதில் வள்ளுவருக்கோ, மற்றும் எவருக்குமோ சந்தேகமில்லை, நியாயமில்லை.. என்னதான் இருப்பினும் தெய்வத்தால் ஆகாதெனினும் என எதற்காக சொல்லியிருக்க வேண்டும்? தெய்வத்தால் ஆகாதது எதுவுமில்லை. அந்தத தெய்வத்தால் ஆகாமற் போனாலும் என்று முயற்சியின் தனிச் சிறப்பை மிகைப்படுத்திச் சொல்வதற்காக இவ்வாறு அவர் கூறியுள்ளார் என்று நாம் தெளிய வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் முயற்சியின் வலிமையினை அவர் குறைவு படுத்த விரும்பவில்லை. அதேநேரத்தில் தெய்வ சக்தியையும் மாசுபடுத்த விரும்பவில்லை. வள்ளுவர் முயற்சியை சிறப்பிப்பதற்காக எந்த சந்தர்ப்பத்திலும தெய்வசக்தியை குறைத்து எடபோட்டிருப்பார் என் எனக்குத் தோன்றவில்லை. தெய்வத்தின் வலிமையை பேராற்றலை அவர் எத்தனையோ இடங்களில் வானுயர வாழ்த்தியிருக்கின்றார். ஊழின் வலிமையை மிகப் பெரிதாக சித்தரித்துக் காட்டியிருக்கின்றார். அத்தனை சிறந்த ஞானமுடைய வள்ளுவர் மனித முயற்சியைப் பற்றி சொல்கின்றபோது தெய்வசக்தியைப் பற்றியும அத்தோடு ஒப்பிட்டு சொல்கின்றார் என்றால் அதற்கு ஒரு உயர்ந்த ஆழமான நோக்கம் இருக்க வேண்டும். முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சி தான சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும்.

(தொடரும்)


## வெள்ளை மயிரிற்கு - விடுதலை

இந்தியாவில் மூலிகைகள் மூலம் தயாரிக்கப்பட்ட தரத்தில் சிறந்த சாயம் **(DIE)** இப்பொழுது இங்கு கிடைக்கின்றது. பாவித்த பலர் புகழ்கிறார்கள். முகத்தில் சாயம் பிடிக்காது. இலகுவாக பூசமுடியும். கறுப்பு, மண்ணிறம் நிறங்களில் கிடைக்கும். மேலதிக தொடர்புகளிற்கு

☎: (416) **267-0314 / Cell: 707-8956**


6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்

## அப்சராஸ்




**RESTAURANT & CATERING**

- கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 (TAKE-OUT ONLY)
- வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
- **"மண்வாசனை"** வாழை இலைச் சாப்பாடு
- எல்லாவகையான வைபவங்களிற்கும்



அழையுங்கள் (416) **412-6164**

**2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy/Finch)**



## நான் ஒரு வழக்கறிஞர் இல்லை


குடிவரவுச் சட்டம்
**Immigration Law**

குற்றவியல் சட்டம்
**Criminal Law**

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



**வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?**

அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

**பின் இவரை அழையுங்கள்...**

எஸ்.கே. தீசன்
(416) **631-6322**

## விளம்பர வினாடி வினா

இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்

இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)

குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -
1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு
1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்

இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்க. வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.

# விளையாட்டுத் தகவல்கள் (40)

-எஸ். கணேஷ்

## றொறன்ரோவில் சாதனைகள் படைக்கும் தமிழர் உதைபந்தாட்ட அணி



"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்னும் முதுமொழிக்கு ஏற்ப தமிழர் உதைபந்தாட்ட அணி கடந்த சில வருடங்களாக Toronto வில் பல சாதனைகளை படைத்து வருவது யாவரும் அறிந்ததே. இங்கு உள்ள உதைபந்தாட்ட கழகங்களில் சிறந்த வீரர்களை ஒழுங்கு திரட்டி எமது வீரர்களை ஒருங்கிணைத்து எமது திறமைகளை ஒன்றாக வெளிப்படுத்தும் போது இந்நாட்டில் எமது வீரர்கள் எவரிற்கும் சளைத்தவர்கள் இல்லை என்ற உண்மை வெளிப்படுகின்றது. அதனால் தான் மேலே உள்ள முதுமொழியை குறிப்பிட்டுள்ளேன். யூத இனமும், சீன இனமும் கனடா நாட்டில் பல திறமைகளை வெளிப்படுத்துவதற்கு காரணம் அவர்களின் ஒற்றுமையே ஆகும். அதேபோல் எமது தமிழினம் ஒன்று சேர்ந்து தொழிற்படும்போது எம்மை யாரும் அசைக்க முடியாது என்ற உண்மையை எமது தமிழர் உதைபந்தாட்ட அணி (Canadian Tamils Soccer Club) நிரூபித்துள்ளனர்.


கடந்த வருடம் திரு. ரஞ்சன் பொன்னுத்துரை அவர்களின் முழுமுயற்சியால் இலங்கையின் பல பாகத்திலும் உள்ள கழகங்களில் விளையாடி புகழ் பூத்த இளம் விளையாட்டு வீரர்கள் றொரன்ரோவில் உள்ள கழகங்களில் இருந்து தெரிவு செய்து இவ் அணி அமைக்கப்பட்டது. இவருக்கு உறுதுணையாக திரு. சிவா அவர்கள் மனேஜராக கடமையாற்றினார். இவ்வருடம் யாவேஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. சிவராஜா அவர்களும் இவர்களுடன் சேர்ந்து தோள்கொடுத்தார். கடந்த 2 வருடங்களும் இவ் அணி நாட்டிய சாதனைகளை பார்க்கும் போது இவ்வணியின் பொறுப்பாளர்களும், விளையாட்டு வீரர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

கடந்த வருடம் Indoor Champion ஆக வந்து இவ்வணி எம் இனத்திற்கு பெருமை ஈட்டி தந்தது. சென்ட வருடம் Indoor உதைபந்தாட்டத்தில் பல வேறு இன அணிகளையெல்லாம் மண் கவ்வச் செய்து வெற்றிமேல் வெற்றி பெற்று முதலாம் இடத்தை வென்று கொண்டது. இதற்கெல்லாம் சிகரம் வைக்குமாற் போல் தமிழ் வீரர்களான கங்கா, பாபு ஆகியோர் League இன் முதலாம், இரண்டாம் இடங்களை அதிகூடிய கோல் Scorer என்ற விருதுகளையும் பெற்றனர்.

இவ்வருடம் Toronto and District Soccer League என அழைக்கப்படும் Toronto விலேயே மிக பிரபல்யம் வாய்ந்த அணிகள் பிரிவில் இரண்டாம் இடத்தை பெற்று T & D Runners Up என்ற விருதையும் வென்று உள்ளனர். அடுத்த வருடம் Outdoor Seasonக்கு 3வது பிரிவில் இருந்து 2 வது இடத்திற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

சென்ற வருடம் Indoor பிரிவு Champion ஆக வந்த படியால் அடுத்த வருடம் Indoor Seasonக்கு 6வது பிரிவில் இருந்து 3 வது பிரிவுக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர். ஆனேகமாக Ontario இல் ஒரு தரத்தில் இருந்து அடுத்த தரத்திற்கு உயர்த்துவதே வழக்கமாகும். ஆனால் திறமையாக விளையாடிய எமது வீரர்கள் அணியை உடனடியாக 3 வது பிரிவிற்கு ஒன்ராரியோ உதைபந்தாட்ட சங்கத்தினால் உயர்த்தப்பட்டமை எமது வீரர்களின் திறமைக்கும் ஒற்றுமைக்கும் கிடைத்த ஒரு கௌரவம் என்றே கருதலாம்.


**இவ்வருடம் சாதனை படைத்த எமது அணியின் வீரர்களை கீழ் காணலாம்.**




**வீரர்களின் விபரம்**

திரு. ரஞ்சன் பொன்னுத்துரை (அணியின் பொறுப்பாளர் )
திரு. சிவா ( " " )
திரு. சிவராஜா ( " " )


| | |
|---|---|
| புவாட் (கொழும்பு வி. கழகம்) Captain | பாபு (Vice Captain) (அரியாலை வி. க.) |
| அந்தனி (யுனைட்டட் வி. க), | கிருபா (Islanders வி. க), |
| Mike (யாவீஸ் வி. க), | சங்கர் (கொழும்பு வி. க), |
| ஜோய் (Joy) (யுனைட்டட் வி. க), | மோகன் (யாவீஸ் வி. க) |
| கங்கா (றொறன்ரோ புளூஸ் வி.க), | பகிர் (யாவீஸ் வி.க) |
| கேதீஸ் (யுனைட்டட் வி.க) | கிளி (யாவீஸ் வி.க) |
| பகிரதன் (யாவீஸ் வி.க) | ரவி (யுனைட்டட் வி.க) |
| அப்பன் (மிசிசாகா பந்தர்ஸ் வி.க) | சண் (குமரன் வி.க) |
| பாபு (யுனைட்டட் வி.க) | ஜேய் (யுனைட்டட் வி.க) |
| றோய் (குமரன் வி.க) | உமா (குமரன் வி.க) |
| சுதன் (யாவீஸ் வி. கழகம்) | ஸ்ரிவ் (யுனைட்டட் வி. க) |
| அன்றூ (குமரன் வி. க) | கண்ணன் (அரியாலை வி.க) |



Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 • (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 431-4357
(416) 399-3235

COMPUSERVICE International
COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
(905) 432-2422 *FAX: (416) 431-5828
Email: compuservice@pathcom.com

TUITION

EXPERIENCED TEACHER IN MATHS & PHYSICS CONDUCT (GROUP / INDIVIDUAL) CLASSES IN CALCULUS, ALGEBRA FINITE MATHS & GEOMETRY FOR O.A.C. STUDENTS & PHYSICS MATHS FOR ALL GRADE FROM 3- 12.
PL. CALL: (416) 431-6774


TUITION
அனுபவம் வாய்ந்த
தரமான முதுகலை
(M.A.) பட்டதாரி
ஆசிரியையினால்
KINDER GARDEN இலிருந்து
Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு
Tution சொல்லிக் கொடுக்கப்படும்
PL. CALL: 755-8034

YARLCAN
STEAM CLEANING
உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709


இதில் முக்கியமாக இவ் அணியின் பயிற்சியாளர் ஆக திரு. Tony அவர்கள் சிறப்பாக இவ்வருடம் கடமையாற்றினார். இவர் கனடாவில் முதல் தர Coach ஆக விளங்குபவர்களில் ஒருவர் இவரின் மகன் Canada வின் National Team இன் முன்னணி வீரர் ஆக தற்போது விளங்குகின்றார். (Dowien Rerosario). இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் எமது வீரர்களை மனஇயல் ரீதியாகவும், ஒழுக்க கட்டுப்பாடு ரீதியாக இவ்வருடம் சிறந்த முறையில் திரு. Tony அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இவ்வருடம் இவரின் பயிற்சியின் பின்பு எமது வீரர்களின் தரமும் திறமையும் பளிச் என தெரிந்தது குறிப்பிடத்தக்கது.

**இவ்வருடம் 1999 Outdoor season புள்ளி விபரம் இங்கு பார்ப்போம்.**

| கழகங்கள் | பங்குபற்றிய ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| Real Toronto | 20 | 17 | 3 | 0 | 51 |
| Canadian Tamils | 20 | 16 | 4 | 0 | 48 |
| Magic A.C.B | 20 | 14 | 5 | 1 | 43 |
| Malvern | 19 | 14 | 5 | 0 | 42 |
| Danforth United | 19 | 11 | 6 | 2 | 35 |
| Phoenix Force | 20 | 9 | 10 | 1 | 28 |
| Jutras | 20 | 8 | 11 | 1 | 25 |
| Homenetmen | 20 | 4 | 15 | 1 | 13 |
| Scar. Blazers | 20 | 1 | 18 | 1 | 4 |
| FC. United | 20 | 1 | 18 | 1 | 4 |

இவ்வருடம் Cup Round இலும் எமது வீரர்கள் தங்கள் திறமைகளை காட்டத் தவறவில்லை. Toronto வில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த T & D League இனால் நடாத்தப்படும் George Finnie Cup ஆட்டங்களில்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 st Round | Canadian Tamils | vs | Malvern | |
| | 3 | : | 0 | (கோல்கள்) |
| 2nd Round | Canadian Tamils | vs | Danforth United | |
| | 6 | : | 0 | (கோல்கள்) |
| அரை இறுதியாட்ட | Canadian Tamils | Vs | Magic A.C.B | |
| Semi Finals | 4 | : | 1 | (கோல்கள்) |

இறுதியாட்டத்தில் எமது வீரர்கள் அணியும் (Tamils), Real Toronto அணியும் October 17ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிக்கு Centenial Stadium (Etobicoke) இல் மோத இருக்கின்றன. எமது வீரர்களுக்கு உற்சாகம், ஆதரவும் தர அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்களும் அழைக்கப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு: ரஞ்சன் (905) 625-7939, Cell: 402-0738
சிவா (905) 471-0022 சிவராஜா (416) 450-5473

***"வாழ்க எமது வீரர்கள்", வளர்க எமது திறமைகள்"***

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுப்பு - பரம் & சண்*

### 1967

1. அனுபவி ராஜா அனுபவி
2. அனுபவம் புதுமை
3. அதே கண்கள்*
4. அரச கட்டளை
5. ஆலயம்
6. இரு மலர்கள்
7. உயிர்மேல் ஆசை
8. ஊட்டிவரை உறவு *
9. எதிரிகள் ஜாக்கிரயதை
10. எங்களுக்கும் காலவரும்
11. கற்பூரம்
12. கந்தன் கருணை*
13. கண்கண்ட தெய்வம்
14. காவல்காரன்
16. காதலித்தால் போதுமா
17. சபாஷ் தம்பி
18. சீதா
19. சுந்தரமூர்த்தி நாயனார்
20. செல்வமகள்
21. தங்கை
22. தங்கத் தம்பி
23. தாய்க்குத் தலைமகன்
24. திருவருட்செல்வர் *
25. தெய்வச் செயல்
26. நான் *
27. நான் யார் தெரியுமா
28. நினைவில் நின்றவள்
30. பவானி
31. பந்தயம்
32. பக்த பிரகலாதா*
33. பட்டத்து ராணி
34. பட்டணத்தில் பூதம்*
35. பாலாடை
36. பாமா விஜயம்
37. பெண்ணே நீ வாழ்க
38. பெண் என்றால் பெண்
39. பேசும் தெய்வம்
40. பொன்னான வாழ்வு
41. மகராசி
42. மனம் ஒரு குரங்கு
43. மாடிவீட்டு மாப்பிள்ளை
44. முகூர்த்த நாள்
45. ராஜாத்தி
46. ராஜாவீட்டுபிள்ளை
47. வாலிப விருந்து
48. விவசாயி
49. 67-ல் என். எஸ். கிருஷ்ணன்

49 படங்கள், இவ்வாண்டு வெளிவந்தன. சிவாஜியின் எட்டு (8) படங்கள் இவ்வாண்டு வெளியாகின. முறையே 'கந்தன் கருணை', 'பாலாடை', 'திருவருட செல்வர்', 'இருமலர்கள்', 'ஊட்டிவரை உறவு'.

எம்.ஜி. ஆரின் நான்கு (4) படங்கள் ஆகும். 'தாய்க்குத் தலை மகன்', 'அரச கட்டளை', 'காவல் காரன்', விவசாயி என்பன ஆகும்.

இயக்குனர் சிகரம் கி. பாலச்தரின் 1964ம் ஆண்டு தொடக்கம திரைப்படத்தை தயாரிக்கத தொடங்கியிருந்தார். 1964ம ஆண்டு 'தெய்வத் தாய்', 'சர்வர் சுந்தரம்' என்ற இரண்டு படங்களையும், 65ல் 4 படங்களையும், 66ல் மேஜர் சந்திரகாந் என்ற ஓரி படத்தையும் 1967ம் ஆண்டு 'பாமா விஜயம்', 'அனுபவி ராஜா அனுபவி' அன்ற இருபடங்களையும் தயாரித்தார்.



'அரச கட்டளை'க்காக எம்.ஜி.ஆர்., சரோஜாதேவி நம்பியாரை இயக்கும் சக்ரபாணி.



அவர் தனது முத்திரையை மெல்ல மெல்ல திரைஉலகில் நிலைநாட்ட தொடங்கிய காலம் இதுவே.

இந்த ஆண்டு (1967) தொடக்கம் தமிழக அரசும் சினிமா படங்களின தரத்திற்கு பரிசு கொடுக்க தொடங்கியது. இந்த ஆண்டு தமிழக அரசால் முதல் மூன்று படங்களும தெரிவு செய்யப்பட்டன. அவை முறையே: 'காவல் காரன்', 'ஆலயம்', 'பாமா விஜயம்' என்பன.

### 1967ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | பாமா விஜயம் |
| நடிகர். | A.V.M. ராஜன் (கற்பூரம்) |
| நடிகை: | K.R. விஜயா (இருமலர்கள்) |
| நகைச்சுவை நடிகர்: | நாகேஷ் (அனுபவிராஜா அனுபவி) |
| நகைச்சுவை நடிகை: | மனோரமா (நினைவில் நின்றவள்) |
| குழந்தை நட்சத்திரம்: | பேபி பத்மினி (நான்) |
| பின்னணி: | TMS, L. R. ஈஸ்வரி |
| இசை: | K.V. மகாதேவன் |
| டைரக்டர்: | K. பாலசந்தர் |


**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT**

தமிழில் இலவச ஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**


*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

**AIRPORT SERVICE & MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) 759-0557


## நான் வாழப் போகிறேன்



-வீணை மைந்தன்

### சுவடு 40

"நான் காதலெனும் கவிதை சொன்னேன் கட்டிலின் மேலே....
என்று சிவாஜி அவர்கள் தன் விழிகளினால் காதல் சிருங்காரம் காட்ட
"அந்தக் கவிதைக்கு நான் பரிசு தந்தேன் தொட்டிலின் மேலே..." என்று திருமதி. சௌகார் ஜானகி நாணமும்.... தாய்மையும் கலந்து தாலாட்டுப் பாடுவது போல் ஒரு காட்சி "பார் மகளே பார்" படத்தில் இடம்பெறும் "நீரோடும் வைகையிலே..." என்று ஆரம்பமாகும் கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள் அவை. இருவரும் மிக அருமையாக பாடல் வரிகளுக்குப் பாவம் காட்டி நடித்திருந்தார்கள். நடிகர் திலகம் செல்வந்தராக, பணக்கார-ராக ஒரு பாத்திரமேற்பாராகில் அவருக்கு இணையான செல்வந்தச் சீமாட்டியாக நாகரீகப் பெண்மணியான குடும்பப் பெண்ணாகவோ அல்லது காதலியாகவோ வேடமேற்றுத் திறம்பட நடித்துப் புகழ் பெறக்கூடியவர் திருமதி. சௌகார் ஜானகி அம்மையார். "பாலும் பழமும்" "பார்மகளே பார்" "புதிய பறவை" "உயர்ந்த மனிதன்" ஆகிய படங்களில் திருமதி. சௌகார் அவர்கள் ஏற்றுக் கொண்ட பாத்திரங்கள் அத்தகையதே!. இயல்பாகவே கீழைத் தேச இந்தியக் கலாச்சாரப் பண்பாடுகளோடு மேலைத் தேயப் பண்பாடுகள், பழக்க வழக்கங்களில், நிறைந்த பரிச்சயமும் ஆங்கில மொழியில் போதிய தேர்ச்சியும் பெற்றவர் சௌகார் அவர்கள். "சௌகார்' (தெலுங்கு) படத்தில் முதன் முதல் தனது நடிப்புப் பணியை ஆரம்பித்துத் திறம்படச் செய்ததால் "ஜானகி" என்ற பெயருக்கு முன் "சௌகார்" ஒட்டிக் கொண்டு விட்டது. "கணேசன்" முன் "சிவாஜி" என்ற பட்டம் இடம் பெற்றது போல் பணக்காரியாக, ஆடம்பரம் மிக்க சீமாட்டியாக எவ்வளவு அநாயாசமாக நடித்து வெளுத்து வாங்குவாரோ அதேபோன்று படிக்காத ஒருவனின் மனைவியாகவும் பாமரத்தனம் மிகுந்தவளாகவும் நடிப்பதில் அவருக்கு நிகர் அவரே!

நடிகர் திலகம் அவர்களுடன் முதன் முதலில் "படிக்காத மேதை" யில் சோடி சேர்ந்து "ரங்கன்" என்ற படிக்காத முரட்டுத் தனமும்,.. அப்பாவியுமான, கணவனுக்கு வாழ்க்கைப் பட்டு பொறுமையெனும் நகையணிந்த இல்லத் துணைவியாக நடித்து ஜனாதிபதி பரிசு பெற்ற திரைச் சித்திரத்தின் நாயகியானவர்.



பார் மகளே பார்

தொடர்ந்து "பாவை விளக்கு" (சிவாஜியின் நான்கு கதாநாயகிகளுள் ஒருவர், 'பாவை விளக்கு' நாயகன் தணிகாசலத்தின் வாழ்வில் நான்கு பெண்கள் குறுக்கிடுகிறார்கள்.) 'பார்மகளே பார்" 'புதிய பறவை' 'மகாகவி காளிதாஸ்', உயர்ந்த மனிதன்' ஆகிய படங்களில் சோடிசேர்ந்தும் 'பார்த்தால் பசி தீரும்' படத்தில் துணைப் பாத்திரமேற்றும் நடிகர் திலகத்திற்கு ஈடு கொடுத்து நடித்துப் புகழ் பெற்றவர். 'பாபு', 'நீதி' ஆகிய படங்களில் சிறந்த குணசித்திர பாத்திரமேற்று சிவாஜியுடன் நடிப்பில் மோதுவார். "உயர்ந்த மனிதன்", 'புதிய பறவை' ஆகிய இரு படங்களிலும் இவருடைய சீமாட்டித்தனமும், ஆடம்பரமும் மிக்க நடிப்பு தனித்தன்மை வாய்ந்தது. நடிகர் திலகத்துடன் சோடி சேர்ந்த நாயகிகளுள் தனித்துப் பேசிக் கூடியளவு திறமையும், ஆற்றலும் வாய்ந்த நடிகை என்பது எனது கணிப்பாகும்.

திருமதி. சௌகார் ஜானகியைச் சந்திக்க நேர்ந்தால் அவரிடமிருந்து நடிகர் திலகத்துடனான கலையுலக அநுபவங்களைக் கேட்டு இத்தொடரில் சேர்த்துக் கொள்வேன். திரையுலகத்தின் மூத்த நடிகைகள் என்கின்ற வகையில் நடிகர் திலகத்துடன் இணைந்து ஒரு சில படங்களில் நடித்தவர்களையும் நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். சில சமயம் சில பெண் நட்சத்திரங்கள் கதாநாயகியாக இணையாவிட்டாலும் துணைப் பாத்திரங்களாகவோ, சகோதரிகளாகவோ, வில்லத் தனமான குணசித்திரப் பாத்திரங்களை ஏற்றுக் கூடவோ நடித்திருப்பார்கள்.

உதாரணமாகப் பழம்பெரும் நடிகை டி.ஆர். ராஜகுமாரி அவர்கள் "அன்பு" படத்தில் சிற்றன்னையாகவும், 'தங்கப் பதுமை' படத்தில் சிவாஜியைத் தன் வசப்படுத்தும் நாட்டியக்காரியாகவும் நடித்திருப்பார். அதேபோல் திருமதி. ராஜசுலோசனா அவர்கள் அம்பிகாபதியில் முறைப் பெண்ணாகவும், 'சாரங்கதாரா', 'படித்தால் மட்டும் போதுமா' போன்ற படங்களில் சோடியாகவும் இணைந்திருப்பார். திருமதி. கமலா லஷ்மணன் அவர்கள் 'பாவை விளக்கு' படத்தில் வரும் நான்கு கதாநாயகிகளுள் ஒருவராக வருவார். திருமதி. வைஜந்தி மாலா அவர்களுடன் 'இரும்புத் திரை' 'ராஜபக்தி', 'சித்தூர் ராணி பத்மினி' ஆகிய படங்களில் சோடி சேர்ந்து நடித்திருப்பார்.

புகழ் பெற்ற வரலாற்றுக் காவியமான 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நாயகிதேவி ஜக்கம்மாளாக வேடமேற்கும் எஸ். வரலஷ்மி அவர்கள் 'ராஜராஜ சோழனில்" சிவாஜியின் சகோதரியாக நடித்திருப்பார். சில பெண் நட்சத்திரங்கள் நாயகியாகவும் வருவார்கள். இன்னொரு படத்தில் சகோதரியாகவோ இல்லை நடித்திருப்பார். சில பெண் நட்சத்திரங்கள் நாயகியாகவும் வருவார்கள்; இன்னொரு படத்தில் சகோதரிவோ இல்லை நண்பனின் மனைவியாகவோ துணைப் பாத்திரமேற்று சிவாஜி யுடன். நடிப்பில் மோதுவார்கள்.

*-கதாநாயகிகள் தொடர்கிறார்கள்*

# PRIVATE TUITION



**(GRADE 6 - O.A.C.)**

அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியரினால் ஆங்கிலம், ஆங்கிலம் (இரண்டாம் மொழி), தமிழ் பாடங்கள் தனிப்பட்ட முறையில் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: (416) **491-6711**


## மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி (St. Michael's College) பழைய மாணவர் சங்கம்

*கல்லூரியின் வருடாந்த இராப்போசன விருந்தும், நத்தார் (Christmas) கொண்டாட்ட சிறப்பு நிகழ்ச்சியும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 4ந் திகதி சனிக்கிழமை மாலை 5:30 மணிக்கு Scarborough Mega Party Hall 3330 Pharmacy Ave. (Pharmay & Mcnicoll Ave.) நடைபெறவிருக்கிறது. சகல பழைய மாணவர்களையும் கனடாவில் வாழும் சகல மட்டக்களப்பு மாவட்ட நண்பர்களையும் அன்போடு அழைக்கின்றோம்....*

## குளிர்கால இலவச உள்ளரங்கங்களில் நடாத்தப்படும் இலவச உதைபந்தாட்ட பயிற்சி நெறிகள்.

கோடை காலங்களில் "ஸ்காபரோ ரேஞ்சேர்ஸ் கழகத்தினால்" நடாத்தப்பட்ட இலவச உதைபந்தாட்ட பயிற்சி நெறிகளை போன்று இவ்வருட குளிர்காலங்களிலும் எதிர்வரும் அக்டோபர் 2ம் திகதியிலிலும் மாலை ஆறு மணிக்கு பின்னர் உள்ளரங்கங்களில் நடாத்தப்படவுள்ளது.

ஸ்காபரோவில் மக்லிவன் & ரப்ஸ்கோட் (Mclevin & Tapscott) சந்திப்புக்கு அருகில் உள்ள லெஸ்ரபியசன் கல்லூரி உள்ளரங்க விளையாட்டு மைதானத்தில் முன்னாள் அகில இலங்கை புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரனும் தற்போது கனடாவில் அரச அனுமதி பெற்ற உதைபந்தாட்ட பயிற்றுனருமாகிய திரு. அன்ரன் கே. சந்திரசேகரா அவர்கள் பயிற்சி வழங்கவுள்ளார்.

நான்கு வயதுக்கும் பதினாறு வயதுக்கும் இடைப்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் இதில் பதிவு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு — P. கோடீஸ் - (416) 423-0490
A. சுதாகரன் - (416) 751-0261 — P. கேதீஸ் _ (416) 288-1539

## கனடா கந்தசுவாமி கோவில் முத்தமிழ் முருகன் ஆலயத் திருப்பணி

பேரருள் பாலித்து நல்வாழ்வு தரும் முருகப்பெருமானுக்கு வேத ஆகம முறைப்படி நிரந்தரமான ஆலயம் அமைய திருவுள்ளம் கூடியுள்ளது.

மூன்று ஏக்கர் நிலத்தில் முத்தமிழ் வளர்த்திடும் முருகனுக்கு ஓர் ஆலயம். அறிவொளி பரப்பும் ஆறுமுகனுக்கு முந்நூற்றுக்கு மேற்பட்ட வாகனத்தரிப்புடன் தேர் வலம் வரவல்ல புண்ணிய பூமி. நம் தமிழர் நிறைந்து வாழும் ஸ்காபரோவில் நல்லருள் பாலிக்கும் வள்ளி மணாளனுக்கோர் ஆலயம்.

மனச்சிக்கல் களைந்து நின்மதி தரும் தியான மண்டபம் அமைய இருக்கும் மாயோன் மருகன் ஆலயம். நம் சிறார் தீந்தமிழும், தங்கக் கலைகளும் கற்றுப் பயின்றிட பாடசாலை அமையவிருக்கும் சிவகுருநாதர் ஆலயம். முதியோர் முத்திநெறி நாடி ஆறுதல்பெற வழி சமைத்துத் தரும் எந்தை பெருமானுக்கோர் ஆலயம்.

பன்னிரு கரத்தானுக்கு பன்னிரண்டு இலட்சம் டொலர் பெறுமதியான நிலம் கொள்வனவு செய்யப்பட உள்ளது. ஒரு இலட்டம் டொலர் முற்பணம் வழங்கப்பட்டாகி விட்டது. இரு இலட்சம் டொலர் இறையன்பு மிக்க அடியார்கள் தந்துள்ளார்கள். எம் இன்னல் களைந்திட திருமுருகனுக்கு ஓர் ஆலயம் அமைத்திடவே வாரி வழங்குங்கள். கோடி புண்ணியம் கிடைக்கும்.

**அள்ளிக் கொடுங்கள் ஆறுமுகத்தான் பேரருள்கிடைக்கும்**
**அரிது அரிது ஆலயத் திருப்பணியில் பங்கு கொள்ளல்**
**அதனிலும் அரிது கலியுகக் கந்தன் ஆலயத்திற்கு உதவுதல்**

*கனடா கந்தனுக்கு ஆலயம் அமைத்திடுவோம்*
*எம்மை பிடித்த துன்பம் துயரம் அகன்றிடும்*
*எம் தாயகத்தில் அமைதியும் ஆறுதலும் கிடைத்திடும்*
*எம்சிறாரின் எதிர்காலம் சுபீட்சமாக அமைந்திடும்.*

இங்ஙனம்
ஆலய அறங்காவலருடன் திருப்பணிச் சபையார், தொலைபேசி (416) 438-1882

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா கிளை

### வருடாந்த இராப்போசன விருந்து-1999

எமது சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23ம் திகதி சனிக்கிழமை மாலை 7:00 மணிக்கு நடைபெறும்.

இடம் : **Eastown Restaurant & Banquet Hall**
**2648 Eglinton Ave. East, Scarborough**

☎: யோகநாதன் (416) 609-9081
சுகுமாரன் (416) 804-9402 சிவா (416) 875-0408


## NetTek Training & Solutions Inc.

**(416) 431-4545**

868 Markam Road, Suite # 104, Scarborough, Ontario, M1H 2Y2

**MCSE & JOB TRAINING**

MICROSOFT CERTIFIED SYSTEMS ENGINEER

Centre for COMPUTER STUDIES AND EMPLOYMENT

Windows NT 4.0 Workstation
Windows NT 4.0 Server
Enterprise Server 4.0
Networking Microsoft TCP/IP
Internet Information Server 4.0
Networking Essentials

**$ 299.00**

PROGRAMMING
JAVA
C++ LANGUAGE
VISUAL BASIC

FREE COMPUTER FOR UNEMPLOYED STUDENTS & SOCIAL BENEFIT STUDENTS

KIDS COMPUTER CLASSES!!

INTRODUCTION TO COMPUTERS FOR ADULTS

CNA
CERTIFIED NOVELL ADMINISTRATOR

QUICK REVIEW in MCSE Courses $99.00 for each!!

**Web Designing & HTML Classes (Level-1 & Level-11)**

E-Mail: nettek-training@home.com

Microsoft® Certified Professional Systems Engineer

www.nettek-training.com

We do Computer Training, Network Consulting & Computer


## வீடு வாங்குபவர்கள் மேற்கொள்ளும் 6 பெரிய தவறுகளை எப்படி தவிர்ப்பது என்று கண்டுபிடித்தல்




**ரொறன்ரோ:** ஒரு புதிய அறிக்கையின்படி வீடு வாங்குபவர்கள் 6 பொதுவானதும். பெறுமதி மிக்கதுமான பிழைகளை வீடு வாங்கும் போது விடுகிறார்கள்.

வீட்டுக்கடன் சட்டங்களில் கடந்த 5 வருடங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உங்களின் வீட்டுக்கடன் அணுகு முறையில் எப்பொழுதும் இல்லாதது போல் சில நல்ல மாற்றங்களை நீங்கள் உண்டாக்கிக் கொள்ளும் போது நீங்கள் பல்லாயிரக்கணக்கான டொலர்களையும் பல வருடத்திற்கான செலவுகளையும் சேமித்துக் கொள்ளலாம்.

நீங்கள் ஒரு புதுவீட்டையோ அல்லது இன்னுமொரு வீடு வாங்கும் போது சில முக்கியமான விடயங்களை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இவற்றிற்குரிய விடயங்களை "Industry Idsiders" என்னும் பத்திரிகையில் "6 Things You Must Know Before You Buy" என்னும் தலைப்பில் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. சரியான தகவல்கள் நிச்சயமாக முக்கியமான சில மாற்றங்களை தேவையான நேரத்தில் ஏற்படுத்தும். இதன் இலவச பதிப்பு உங்களிற்கு தேவையாயின் நீங்கள் வாரத்தில் எந்த நாட்களில் எந்த நேரமும் தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்: 1-800-705-9027, ID #1004

உங்களின் அடுத்த வீட்டிற்கு சிறந்ததும் நியாயமான வீட்டுக்கடனை பெறுவது எப்படி என்பதனை தெரிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும். **DANNY D**. - ☎: (416) 491-4002

## உலகவலத்தில் "இந்தியா"



காலங்கள் கரைந்தன. 13ம் அகில இந்தியத் தேர்தல் சுமூகமாக நடந்து முடிந்து விட்டன. இந்திய பாராளுமன்ற மக்கள் அவையில் மொத்தமாக 545 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இது இந்திய சட்ட அமைப்பு. இதில் 543 தொகுதிகளிற்கு தேர்தல் நடைபெறும். இருவர் நியமனத்தில தெரிவுசெய்யப்படுவார்கள். செப்டெம்பர் 5/ 99ந் திகதி தொடங்கிய இந்திய 13வது தேர்தல் 5 கட்டங்களாக ஒக்டோபர் 03/ 99 வரை மக்கள வாக்களித்தார்கள். இம்முறையே இவ்வளவு நீண்டகாலமாக தேர்தல இந்தியாவில் நடைபெற்றுள்ளது. இம்முறை 545 மொத்த தொகுதிகளில் 2 நீங்கலாக தொகுதிகள், 543 தொகுதிகளிற்கு நடைபெறவேண்டும். ஆனால் 5 தொகுதிகளில் தேர்தல் நடைபெறவில்லை. 1 தொகுதியின் முடிவு வரவில்லை. வெளிவந்த 537 தொகுதிகளில் பாரதீய ஜனதா கூட்டணி 304 தொகுதிகளிலும், காங்கிரஸ் கூட்டணி 134 தொகுதிகளிலும், இடதுசாரி உட்பட மற்றயவை 99 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. ஆகக்கூடுதலான கூட்டணியும் தனியாக கூடிய தொகுதிகளையும பெற்ற பாரதிய ஜனதா கூட்டணியை ஆட்சி அமைக்குமாறு இன்றைய ஜனாதிபதி திரு. கே. ஆர். நாராயணன், திரு. அடல் பிஹாரி வாஜ்பாய் ஐ கேட்டுக்கொண்டார். ஒக்டோபர் 13ந் திகதி தனது அமைச்சர்களுடன் திரு. வாஜ்பாய் பதவி ஏற்றார். இம்முறை நடந்த தேர்தலில் இதுவரை காங்கிரஸ பெறாத படுதோல்வியை காங்கிரஸ் பெற்றுள்ளது. இதற்கு சோனியா காந்தி காரணமாக இருக்கலாம் என பத்திரிகைகள் தமது கருத்தை தெரிவிக்கின்றன.

அடல் பிஹாரி வாஜ்பாய் 1926ம் ஆண்டு டிசெம்பர் 25ம் திகதி (கிறிஸ்மஸ்) பிறந்தவர். அரசியலில் மதிநுட்பமும், அறிவும், ஆற்றலும் கொண்டவர், நகைச்சுவையாகவும், மக்களைக் கவரக் கூடியதாக பேசக்கூடியவர். 1977ல் ஜனதாக் கட்சி ஆட்சியை ஏற்றபோது வெளியுறவு மந்திரி (தொடர்ச்சி 10ம் பக்கம்)

**சூரியக்குடும்பம் 19**

# விண்வெளி

*தருபவர்- கனி*

சென்றதடவையில் நமது இளம்பூமியின் முதல் இரண்டு படிநிலைகளைப் பற்றியும் கூறியிருந்தேன். இரண்டாவது கட்ட நிலையில் ஏற்பட்ட பாறைத் துணிக்கைகளின் மோதல்களினால் எமது பூமியின் மேற்பரப்பு முழுவதுமே மேடும் பள்ளமும் நிறைந்து காணப்பட்டது. அப்போதிருந்த பூமியில் வளிமண்டலம் இல்லாது இருந்ததினால் வெளியில் இருந்து வந்த எந்தச் சிறிய திணிவுமே பூமியை மோதி அதில் ஐக்கியமாகிக் கொண்டிருந்தன. அடுத்து வந்த மூன்றாவது கட்ட நிலையே மிகமுக்கியமானதாக அமைகின்றது. இந்த மூன்றாவது நிலையின் போது இரண்டாவது நிலையின் போது ஏற்பட்ட பள்ளங்கள் நிரப்பப்பட்டன. எப்படி, எவற்றால் நிரப்பப்பட்டன என இனிப்போர்ப்போம்.

பூமியின் உட்பகுதியில் இருந்த கதிர்த்தொழிற்பாட்டு மூலகங்கள் பூமியின் உ[illegible]தியை மேலும் வெப்பமாக்கத் தொடங்கின. இதனால் கதிர் தொழிற்பாட்டின் போது பிறப்பிக்கப்பட்ட புதிய மூலகங்கள் நிறையவே பூமியின் உட்பகுதியில் சேரத் தொடங்கின. பூமியின் உட்பகுதியின் அளவுக்கதிகமான வெப்பம் பூமியின் வெளிப்பகுதியில் உருவாகியிருந்த கோள ஓட்டினைத் தள்ளத் தொடங்கியது. கோள ஓட்டின் மெல்லிய பகுதிகளை உடைத்துக் கொண்டு வெளியே வந்த சூடான குழம்பு நிலையில் இருந்த (LAVA) கதிர்த் தொழிற்பாட்டு எச்சங்கள் பூமியின் வெளிப்பரப்பில் இருந்த பள்ளங்களை நிரப்பி காலம் செல்லச் செல்ல இறுதி திரவநிலையில் இருந்த குழம்புகள் எல்லாம் திண்ம நிலைக்கு வந்தன. இதனால் பூமியின் மேற்பரப்பு கனிவளங்கள் நிரம்பிய ஒரு மேற்பரப்பாக மாறியது.

பூமியின் உட்பகுதியில் இருந்த சூடான திரவக் குழம்பு பூமியின் வெளிஓட்டின் வலிமை குறைந்த பகுதிகளை உடைத்துக் கொண்டு வெளிவருகையில் சில வாயுத்துணிக்கைகளும் வெளித்தள்ளப்பட்டன. சூடான திரவக் கனிப்பொருட் குழம்பு குளிர்ந்து இறுகுகையில் அச்சமயமும் பல வாயுமூலக்கூறுகள் பூமியின் மேற்பரப்பில் இந்து வெளியேறின. இவற்றில் நீராவியும் ஒன்று. பூமியின் பிரமாண்டமான திணிவின் காரணமாக இந்த வாயு மூலக்கூறுகள் நீராவி என்பன பூமியை விலத்திப் போக முடியாமல் பூமியின் மேற்பரப்பின் மேல் தங்கி வளிமண்டலம் ஒன்றை உண்டாக்கின. மேலும் அதிக அளவில் ஒன்று சேர்ந்த நீராவி குளிர்ச்சியடைந்து நீர்த்துளிகளாகி மீண்டும் பூமியின் மேற்பரப்பு நோக்கி மழையாக (இதுவே பூமியின் முதல் மழை) வந்து பூமியின் மேற்பரப்பில் நீரைக் கொண்டு வந்தது. ஆங்காங்கு பெய்த தொடர்ச்சியான மழைகளின் காரணமாக சேர்ந்த நீர் எல்லாம் சேர்ந்து பூமியில் அப்பொழுது இருந்த பள்ளங்களை எல்லாம் நிரப்பி, பூமியின் மேற்பரப்பில் சமுத்திரங்கள், கடல்கள், குளங்கள் என ஏற்படத்தொடங்கின. இதுவே நமது பூமியின் மூன்றாவது கட்ட வளர்ச்சிப்படி நிலையாகும்.

